# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.72/2022 | Date | : | 03-12-2024 |
| Deposition of Witness for | : | அ.சா.8 | Taluk | : | |
| Name | : | திருமுருகன் | Calling | : | |
| Father/Husband Name | : | பெருமாள் | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.12.2024.
(எதிரிகள் ஆஜர், எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் தற்போது சங்ககிரி போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02-01-2021ம் தேதி, 14.00 மணிக்கு நான் சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது, முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனையில் கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் நான் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மணியம்மாள், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, 15.00 மணிக்கு நிலையம் வந்து மேற்படி வாக்குமூலத்தின் அடிப்படையில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.07/2021, சட்டப்பிரிவுகள் 294(பி), 324 இதச மற்றும் 4 of TNPHW ACT ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன், ஒரு நகலை சங்ககிரி காவல் நிலைய உதவி

ஆய்வாளர் திருமதி.செந்தாமரைசெல்வி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை :–**

1) புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். புகார் வாக்குமூலம் பெறப்பட்டதாக புகார் வாக்குமூலத்திற்கு பின்புறம் கூறப்பட்டுள்ள சங்கதியை யார் எழுதினார்கள் என்றால் நான் எழுதவில்லை, யார் எழுதினார்கள் என்று ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கையில் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டதற்கான விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) முதல் தகவல் அறிக்கையில் காலம்.15 ல் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை எப்போது அனுப்பப்பட்டது என்று நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சங்ககிரி காவல் நிலையத்திற்கும், நீதிமன்றத்திற்கும் 100 அடி தொலைவு தான் இருக்கும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 02 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) முதல் தகவல் அறிக்கையும், புகார் வாக்குமூலமும் கலந்தாலோசித்து போலியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால், தான் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், எனக்கு தகவல் கிடைக்கவில்லை என்றும், நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளை அலைகழிப்பதற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

Sd/-Thirumurugan

Sd/-S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.